# சங்க இலக்கியத்தில் ஆண்கள் விளையாட்டுக்கள்

*கி. செந்தில் குமார்*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
பசும்பொன் முத்துராமலிங்க தேவர் கல்லூரி

மலர்: 12

சிறப்பிதழ்: 1

மாதம்: மார்ச்

வருடம்: 2025

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.5281/zenodo.14958729

## முன்னுரை

மனிதன் தோன்றிய காலம் முதல் விளையாட்டு உணர்வுடன் வாழ்ந்து வருகிறான். அந்த உணர்வு நாடு, இயற்கை அமைப்பு, சூழ்நிலை, பண்பாடு, வாழ்வியல் போன்றவற்றிற்கு ஏற்ப மாறுபட்டுள்ளது. இவ்வாறு தொன்று தொட்டு விளையாட்டு மனித வாழ்வியலோடு ஒன்றிக் கலந்துள்ளது. தமிழர்களின் தனித்த அடையாளமான சங்க இலக்கியத்திலும் இவ்விளையாட்டுகள் குறித்த பதிவுகள் இடம்பெற்றுள்ளன. அத்தகைய விளையாட்டுக்களில் ஆண்கள் குறித்த விளையாட்டுக்கள் சிலவற்றை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

## சங்க இலக்கிய ஆண்கள் விளையாட்டின் வகைப்பாடுகள்

சங்க இலக்கியங்களில் காணலாகும் ஆண்கள் குறித்தான விளையாட்டுக்களை மூன்று வகைகளாக வகைப்படுத்த முடியும். அவை,

1. வீரத்தினை வெளிப்படுத்தும் விளையாட்டுக்கள்
2. அறிவினை வெளிப்படுத்தும் விளையாட்டுக்கள்
3. புலன் சார்ந்த விளையாட்டுக்கள்

என்பனவாகும். இவற்றில் வீரத்தினை வெளிப்படுத்தும் விளையாட்டுக்களாக ஏறுதழுவுதல், குதிரை ஏற்றம், மல், நீர் விளையாட்டு போன்றவற்றைக் குறிப்பிடலாம். அறிவியக்கம் சார்ந்த விளையாட்டுக்களாக அசதியாடல், சூது, சாம விளையாட்டு போன்றவற்றைக் கூறலாம். புலன் சார்ந்த விளையாட்டுக்களாக அம்புலி ஆகியவற்றைக் குறிக்கலாம்.

## ஏறுதழுவுதல்

இவ்விளையாட்டு சங்க இலக்கியங்களில் அமைந்து மிக முக்கியமான ஆண்கள் விளையாட்டாகும். இது அவர்களின் வீரத்தினை வெளிப்படுத்தும் விதமாகவும் தாங்கள் விரும்பும் தலைவியரைச் சேர்வதற்காகவும் அமையும். இவ்விளையாட்டில் வலிமையான, கூர்மையான கொம்புகளை உடைய எருதுகளை ஆயுதம் ஏதும் இன்றி, தமது உடல் வலிமையால் அடக்குவர். இவ்விளையாட்டு முல்லை நில விளையாட்டாகக் காட்டப்பெற்றுள்ளது. மேலும், இவ்விளையாட்டு குறித்த செய்திகள் முல்லைக்கலியில் மட்டுமே இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது ஆகும்.

ஆயர்குடிப் பெண்கள் தங்கள் திருமணத்தின் பொருட்டு எருதுகளை வளர்ப்பர். அவர்களை விரும்பும் தலைவர்கள் அவ்வெருதுகளை அடக்கி அப்பெண்களை மணப்பர். இதனை,

**"ஓஒ இவள் பொருபுகல் நல்லேறு கொள்ப ரல்லால்**
**திருமாமெய் தீண்டல ரென்று கருமமா**
**எல்லாருங் கேட்ப அறைந்தறைந் தெப்பொழுதுஞ்**
**சொல்லாற் றரம் பட்டவள்"**[1]

**"கொல்லேறு சாட இருந்தார்க்கெம் பல்லிருங் கூந்தலனை கொடுப்பேம் யாம்"**[2]

போன்ற பாலடிகள் சுட்டிநிற்கின்றன. மேலும்,

**"கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்**
**புல்லாளே ஆய மகள்"**[3]

என்று ஏற்றினைத் தழுவுவதற்கு அஞ்சுபவனை ஆய மகள் இப்பிறவியில் மட்டுமல்லாது மறுபிறப்பிலும் மணந்துகொள்ளமாட்டாள் என்பதையும் கலித்தொகை குறிப்பிடுகின்றது. இவ்விளையாட்டினைச் சிலப்பதிகாரம் ஆய்ச்சியர்குரவை,

**"தூநிற வெள்ளை அடர்த்தாற் குரியளிப்**
**புவைப் புதுமல ராள்**
**ஆங்கு**
**தொழுவிடை ஏறு குறித்து வளர்த்தார்**
**எழுவரிளங் கோதை யார்"**[4]

என்று பதிவு செய்துள்ளது. இவ் ஏறுதழுவல் தற்போது சல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு, எருதுக்கட்டு, மாட்டி வேடிக்கை என்று பல்வேறு பெயர்களில் வழங்கப்பெறுகின்றது.

### மற்போர்

இது தற்காலத்தில் தற்காப்புப் போர் முறையாய் உள்ளது ஆனால் இவ்விளையாட்டு சங்க காலத்தில் விளையாட்டாய் நிகழ்த்தப்பெற்றுள்ளது. முக்காவல் நாட்டு ஆமூர் மல்லன் மற்போரில் வல்லவன் என்பதும், அவனது பெயராலும், அவனது போர் வல்லமை பற்றிப் பேசும் பாடல் அடியாலும் தெளிவாக உணரலாம். உடலாண்மையையும் உடல்தினவால் மதமதப்பும் உடையவன் மல்லன் என்பதை அறியமுடிகின்றது. இதனை,

**"என், புற்கை யுண்டும் பெருந்தோ ளன்னே**
**யாமே, புறஞ்சிறை இருந்தும் பொன்னன் னம்மே**
**போறெதிர்ந்து என் போர்க்களம் புகினே,**
**கல்லென் பேரூர் விழவுடை ஆங்கண்,**
**ஏமுற்றுக் கழிந்த மள்ளர்க்கு**
**உமணர் வெரூஉம் துறையன் னன்னே"**[5]

என்ற புறநானூற்றுப் பாடல்வழி உணர முடிகின்றது. மேலும் இந்த மல்லனும் சோழன் போர்வைக் கோப்பெருநற் கிள்ளியும் மற்போரில் ஈடுபட்டனர். மற்போர் ஒற்றைக்கு ஒற்றை என்ற முறையில் நடந்ததாகப் புலவர் குறிப்பிடுகின்றார். இமமன்னனும் மற்போரில் வல்லவன். இந்தக் கிள்ளி ஆமூர் மல்லனோடு மற்போர் புரியும்போது ஒரு காலை மார்பிலே ஒதுங்குமாறு மண்டியிட்டுக்கொண்டு போரிட்டான் என்றும் மற்றொரு காலால் தாக்க வரும் தார்ப்படையைத் தடுத்து நிறுத்திக்கொண்டு பின் பக்கமாகப் போரிட்டான் என்றும் புறநானூற்று 80 ஆவது பாடல் குறிப்பிடுகின்றது. இதில் அந்த மல்லன் மாண்டான் என்று குறிப்பு உள்ளதால் வெற்றி தோல்வி என்பது போரிடுவோரில் ஒருவரது சாவிலேயே தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

### பண்ணை விளையாட்டு

இது ஒரு நீர் விளையாட்டு ஆகும். இதனைத் தொல்காப்பியர் பொதுவாக விளையாட்டைக் குறிக்கும் சொல்லாகக் குறிப்பிட்டிருந்தாலும் ஐங்குறுநூறு இதனை நீர் விளையாட்டாகப் பதிவுசெய்துள்ளது. இது நீரில் மகளிர் பாய்ந்து விளையாடும் விளையாட்டு என்று குறிப்பிடுகின்றது. இதனை,

**"விசும்பு இழி தோகைச் சீர் போன்றிசினே**
**பசும் பொன் அவிர் இழை பைய நிழற்ற,**
**கரை சேர் மருதம் ஏறிப்**
**பண்ணை பாய்வோள் தண் நறுங் கதுப்பேசு"**[6]

என்ற பாடல் வழி உணரமுடிகின்றது. மேலும், கரையிலிருந்த மருதமரத்தில் ஏறிய தலைவி நீரில் பாய்ந்தாள். அது வானத்திலிருந்து மயில்

இறங்குவது போல இருந்தது. அவள் அணிந்திருந்த அணிகலன்கள் மயில் தோகையையும், தோகைக் கண்களையும் போல விளங்கின என்று தலைவன் வியந்து கூறுவதாக அமைந்துள்ளது. இதன்வழி பண்ணை என்பது ஒரு நீர் விளையாட்டாக அமைவதைக் காணலாம்.

அதேபோல் பெண்கள் ஆற்றில் பாய்ந்து விளையாடியும் இருக்கின்றனர். அவ்வாறு அவர்கள் பாய்ந்ததினால் அதில் புத்திருந்த குவளைப் பூக்கள் தண்ணீரில் கலங்கித் தண்ணீரெல்லாம் பூ மணம் வீசியுள்ளது. இதனை,

**"வண்ண ஒண் தழை நுடங்க, வால் இழை**
**ஒண்ணுதல் அரிவை பண்ணை பாய்ந்தென,**
**கள் நறுங் குவளை நாறித்**
**தண்ணென்றிசினே பெருந் துறைப் புனலே"[7]**

என்ற பாடல் சுட்டிச்செல்கின்றது. அதேபோல் புணரிப் பாய்தல் என்ற விளையாட்டும் சுட்டப்பெறுகின்றது. இதனை,

**"ஓங்கற் புணரி பாய்ந்து ஆடு மகளிர்**
**அணிந்திடு பல் பு மர°இ, ஆர்ந்த"[8]**

என்ற பாடலடிகளின் வழி உணரமுடிகின்றது. நீராடும் துறைகளுக்கு அருகில் அமைக்கப்பட்டிருக்கும் பரண் மேல் ஏறிநின்று நீரில் பாய்தல் "புணரிப் பாய்தல்" என்ற விளையாட்டாகும். இது குறிஞ்சி நிலத்தில் நிகழ்வதாகும்.

### நீச்சல் நடனம்

தண்ணீரில் நடனமாடுவது பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் உள்ளன. இது ஒரு போட்டியாகவும் நடைபெற்றுள்ளது. இந்நீச்சல் நடனத்தில் அத்தி என்பவன் திறம் பெற்றவராகத் திகழ்ந்துள்ளார். இசைக்கு ஏற்றவாறு அவன் ஆடியுள்ளான். மேலும் தண்ணீருக்கு அடியில் மூழ்கித் தனது கால்கள் மட்டும் வெளியே தெரியும்வண்ணம் ஆடிக்காட்டியுள்ளான். தனது வயிறு மட்டும் தண்ணீருக்கு மேலே வரும்படித் தண்ணீருக்குள்ளே உருண்டுகாட்டியும் ஆடியுள்ளான். தனது இடுப்பில் அணிந்திருந்த பாண்டில் என்னும் அணிகலன் தண்ணீருக்கு மேலே வரும்படியும் அதன் பரல்கள் ஓசை எழுப்பும் படியும் ஆடியுள்ளான். இதனை,

**"கல்லா யானை கடிபுனல் கற்றென**
**மலிபுனல் பொருத மருதோங்கு படப்பை**
**ஒலிக்கதிர்க் கழனிக் கழாஅர் முன்றுறை**
**கலிகொள் சுற்றமொடு கரிகால் காண**
**தண்பதம் கொண்டு தவிர்ந்த இன்னிசை**
**ஒண்பொறிப் புனைகழல் சேவடி புரள**
**கருங்கச்சு யாத்த காண்பின் அவ்வயிற்று**
**இரும்பொலம் பாண்டில் மணியொடு தெளிர்ப்பப்**
**புனல் நயந்தாடும் அத்தி அணிநயந்து**
**காவிரி கொண்டொளித்தாங்கு[9]**

என்ற பாடல் வழி உணரமுடிகின்றது. இந்நடனம் "ஆடு அணி" என்றும் வழங்கப்பெற்றுள்ளது. இதில் அவனது உடற்கட்டும், ஒப்பனையும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இவ்விளையாட்டின் நடுவராக கரிகால் வளவன் இருந்துள்ளதையும் இப்பாடல் வழி அறியமுடிகின்றது.

### முடிவுரை

விளையாட்டு என்பது ஒரு மரபின் தொடர்ச்சியாகும். இது சங்க காலம் முதல் தொடந்து வந்திருக்கிறது. ஆனால் காலத்திற்கு ஏற்ப விளையாட்டின் தன்மையும் கூறும் சிறிது மாறியுள்ளதே தவிர, விளையாட்டுகள் மாறவில்லை. அவ்வகையில் சங்க இலக்கியத்தில் வீரம் சொறிந்த விளையாட்டுக்களும் பொழுது போக்கு விளையாட்டுகளும் இருப்பதைக் காணமுடிகின்றது. குறிப்பா ஏறுதழுவுதல் சங்கத் தமிழர்களின் வீரத்தினை வெளிப்படுத்தும் விதமாகவும் தாங்கள் விரும்பும் தலைவியரைச் சேர்வதற்காகவும் அமையுள்ளது. இவ்விளையாட்டில் வலிமையான, கூர்மையான கொம்புகளை உடைய எருதுகளை ஆயுதம் ஏதும் இன்றி, தமது உடல் வலிமையால் அடக்குவர். மேலும் நீர்விளையாட்டுக்களும் மல்யுத்தமும் காணப்பெறுகின்றன. இதில் அமைந்துள்ள நீர்விளையாட்டு பொழுதுபோக்கிற்காக அமைந்திருப்பதை அறியமுடிகின்றது.

### சான்றெண்விளக்கம்

1. கலித்தொகை, 102 (9 - 12)
2. கலித்தொகை, 102 (41 - 42)

3. கலித்தொகை, 103 (63 - 64)
4. சிலப்பதிகாரம், ஆய்ச்சியர் குரவை
5. புறநானூறு, 84
6. ஐங்குறுநூறு., 74
7. ஐங்குறுநூறு., 73
8. நற்றிணை., 395 (6 - 7)
9. அகநானூறு., 376

## துணைநூற் பட்டியல்


1. ஐங்குறுநூறு மூலமும் பழைய உரையும், எஸ்.கலியாணசுந்தரையர், (ப.ஆ.,), கபீர் அச்சுக்கூடம், சென்னை. 1949. இரண்டாம் பதிப்பு.
2. கலித்தொகை மதுரையாசிரியர் பாரத்து வாசி நச்சினார்க்கினியருரையுடன், வெ.பெரி.பழ.மு.காசிவிசுவநாதன் செட்டியார் (ப.ஆ.,) கழக வெளியீடு, 1ஃ140, பிராட்வே, சென்னை - 1, 1938. முதற்பதிப்பு.
3. சிலப்பதிகாரம் மூலமும் தெளிவுரையும், ஜெ.ஸ்ரீசந்திரன் (உ.ஆ.,) தமிழ்நிலையம், 40, சரோஜினி தெரு, தியாகராய நகர், சென்னை, முதற் பதிப்பு, 2013
4. நற்றிணை மூலமும் உரையும், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், (உ.ஆ.,), கழக வெளியீடு, சென்னை, 1952. முதற்பதிப்பு.
5. புறநானூறு மூலமும் உரையும், எஸ்.கலியாணசுந்தரையர், (ப.ஆ.,), ஜோதி அச்சுக்கூடம், சென்னை. 1950. இரண்டாம் பதிப்பு.